
ராஜாவுக்கு
நியாயத்தீர்ப்புகள்
Judgments for the King

Song 4 ராஜாவுக்கு நியாயத்தீர்ப்புகள்

Psalm 72 – Prayer for the king to rule with justice and righteousness, defend the poor, crush oppressors, bring peace like rain, reign to earth's ends, receive tribute from kings. Idealized reign fulfilled in Jesus Christ (Luke 1:32–33).

ராஜாவுக்கு நியாயத்தீர்ப்புகள்
ராஜகுமாரனுக்கு தேவ நீதிகள்
தேவனே கொடுத்திடும்
கர்த்தரே கொடுத்திடும்

ஜனங்களை நீதியோடும் ஏழைகளை நியாயத்தோடும்
விசாரிக்க ராஜாவுக்கு நீரே கொடுக்கணும்
ஜனத்திற்கு சமாதானத்தை நீரே தந்திடனும்

சிறுமைப்பட்டவனை ராஜா நியாயம் விசாரிப்பார்
ஏழைகளின் பிள்ளைகளை அவரே இரட்சிப்பார்
இடுக்கண் செய்பவனை ராஜா நொறுக்குவார்
பலவீனன் எளியவனுக்கு அவரே இரங்குவார்

KJC-DNN

ராஜாவுக்கு நியாயத்தீர்ப்புகள்
ராஜகுமாரனுக்கு தேவ நீதிகள்
தேவனே கொடுத்திடும்
கர்த்தரே கொடுத்திடும்

சூரியன் சந்திரன் இருக்கும்வரையில் பயந்திருப்பார்கள்
பூமியை நனைக்கும் தூறலைப்போல ராஜா இறங்குவார்
பூமியின் எல்லை வரைக்கும் அவரே அரசாளுவார்
சகல ராஜாக்களும் ராஜாவைப் பணிந்து கொள்வார்கள்.

ராஜாவுக்கு நியாயத்தீர்ப்புகள்
ராஜகுமாரனுக்கு தேவ நீதிகள்
தேவனே கொடுத்திடும்
கர்த்தரே கொடுத்திடும்

வனாந்தரத்தார் ராஜாவை குனிந்து வணங்குவர்
அவருடைய சத்துருக்கள் மண்ணை நக்குவர்
தர்ஷீசின் ராஜாக்கள் காணிக்கைகளைக் கொண்டுவருவர்
சேபாவின் ராஜாக்களோ வெகுமானங்களைக்
கொண்டுவருவர்.

ராஜாவுக்கு நியாயத்தீர்ப்புகள்
ராஜகுமாரனுக்கு தேவ நீதிகள்
தேவனே கொடுத்திடும்
கர்த்தரே கொடுத்திடும்

ராஜாவினிமித்தம் இடைவிடாமல் ஜெபம் பண்ணப்படும்.
எந்நாளும் எந்நேரமும் அவர் ஸ்தோத்தரிக்கப்படுவார்
அவருடைய நாமம் என்றென்றைக்கும் இருக்கும்
மனுஷரெல்லாம் அவருக்குள் ஆசீர்வதிக்கப்படுவர்

ராஜாவுக்கு நியாயத்தீர்ப்புகள்
ராஜகுமாரனுக்கு தேவ நீதிகள்
தேவனே கொடுத்திடும்
கர்த்தரே கொடுத்திடும்

KJC-DNN


Judgments for the King